வகுப்பு : 10

தேர்வு எண்

# அலகுத் தேர்வு - 1, ஜூலை - 2024

நேரம் : 1.30 மணி]

## தமிழ்

[மொத்த மதிப்பெண்கள் : 50

பகுதி – 1

குறிப்பு : அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். 6X1=6

கொடுக்கப்பட்ட நான்கு விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையினைத் தேர்ந்தெடுத்து குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்.

1. "காய்ந்த இலையும் காய்ந்த தோகையும்" நிலத்துக்கு நல்ல உரங்கள் இத்தொடரில் அடிக்கோடிட்ட பகுதி குறிப்பிடுவது –
(அ) இலையும் சருகும் (ஆ) தோகையும் சண்டும்
(இ) தாளும் ஓலையும் (ஈ) சருகும் சண்டும்
2. "மெத்த வணிகலன்" என்னும் தொடரில் தமிழழகனார் குறிப்பிடுவது –
(அ) வணிகக் கப்பல்களும் ஐம்பெரும் காப்பியங்களும் (ஆ) பெரும் வணிகமும் பெரும் கலன்களும்
(இ) ஐம்பெரும் காப்பியங்களும் அணிகலன்களும் (ஈ) வணிகக் கப்பல்களும் அணிகலன்களும்
3. "உனக்குப் பாட்டுகள் பாடுகிறோம்
உனக்குப் புகழ்ச்சிகள் கூறுகிறோம்" – பாரதியின் இவ்வடிகளில் இடம்பெற்றுள்ள நயங்கள் யாவை?
(அ) உருவகம், எதுகை (ஆ) மோனை, எதுகை (இ) முரண், இயைபு (ஈ) உவமை, எதுகை
4. செய்யுளில் ஓசை குறையும் போது அதனை நிறைவு செய்ய அளபெடுப்பது –
(அ) ஒற்றளபெடை (ஆ) செய்யுளிசை அளபெடை
(இ) இன்னிசை அளபெடை (ஈ) சொல்லிசை அளபெடை

பாடலைப் படித்து வினாக்களுக்கு விடையளிக்க.

"நனந்தலை உலகம் வளைஇ நேமியொடு
வலம்புரி பொறித்த மாதாங்கு தடக்கை
நீர் செல, நிமிர்ந்த மாஅல் போல,
பாடுஇமிழ் பனிக்கடல் பருகி, வலன் ஏர்பு"

5. பாடல் இடம்பெற்றுள்ள நூல் ---------
(அ) சிலப்பதிகாரம் (ஆ) திருவிளையாடற் புராணம்
(இ) முல்லைப்பாட்டு (ஈ) குறிஞ்சிப்பாட்டு
6. நேமி – பொருள் தருக.
(அ) முத்து (ஆ) கடல் (இ) சங்கு (ஈ) சக்கரம்

பகுதி – II

பிரிவு – 1

எவையேனும் மூன்று வினாக்களுக்கு விடையளிக்க. 3x2=6

7. "நமக்கு உயிர் காற்று
காற்றுக்கு வரம் மரம் – மரங்களை
வெட்டி எறியாமல் நட்டு வளர்ப்போம்" – இதுபோன்று உலகக் காற்று நாள் விழிப்புணர்வுக்கான இரண்டு முழக்கத் தொடர்களை எழுதுக.
8. வசன கவிதை – குறிப்பு எழுதுக.
9. விடைகளுக்கேற்ற வினாக்கள் எழுதுக.
அ) தமிழ்த்தென்றல் திரு.வி.க போல் இமைகளை மூடியபடி எழுதும் ஆற்றல் கொண்டவர் தமிழ்த்திரு இரா.இளங்குமரனார்.
ஆ) உலகிலேயே தமிழ்மொழிக்காக உலக மாநாடு நடத்திய முதல் நாடு மலேசியா.
10. 'மன்னும் சிலம்பே! மணிமே கலைவடிவே!
முன்னும் நினைவால் முடிதாழ வாழ்த்துவமே!' – இவ்வடிகளில் இடம்பெற்றுள்ள காப்பியங்களைத் தவிர எஞ்சியுள்ள ஐம்பெருங்காப்பியங்களின் பெயர்களை எழுதுக.
11. 'இரட்டுற மொழிதல்' – குறிப்பு எழுதுக.

பிரிவு – 2

எவையேனும் மூன்று வினாக்களுக்கு விடையளிக்க. 3x2=6

12. கல், பழம், ஆடு, புல் – இவற்றின் கூட்டப் பெயர்களை எழுதுக.
13. நடவாமை, கேடு என்பவை எவ்வகைத் தொழிற்பெயர்கள்?



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

14. சொற்களை இணைத்துப் புதிய இரு சொற்களை உருவாக்குக.
(தேன், மணி, மழை, மேகலை)

15. 'வேங்கை' என்பதைத் தொடர்மொழியாகவும் பொதுமொழியாகவும் வேறுபடுத்திக் காட்டுக.

16. பொறித்த – பகுபத உறுப்பிலக்கணம் தருக.

## பகுதி – III

### பிரிவு – 1

எவையேனும் மூன்று வினாக்களுக்கு விடையளிக்க. 3X3=9

17. முல்லைப்பாட்டின் காட்சிகளிலிருந்து நீங்கள் உணரும் சங்ககால மக்களின் வாழ்க்கைச் சூழலைச் சுருக்கமாக எழுதுக.

18. சோலைக் (பூங்கா) காற்றும் மின்விசிறிக் காற்றும் பேசிக்கொள்வது போல் ஓர் உரையாடல் அமைக்க.

19. தமிழழகனார் தமிழையும் கடலையும் இரட்டுறமொழியும் பாங்கினை விளக்குக.

20. தோட்டத்தில் மல்லிகைப்பூ பறித்த பூங்கொடி, வரும்வழியில் ஆடுமாடுகளுக்குத் தண்ணீர்த்தொட்டியில் குடிநீர் நிரப்பினாள். வீட்டினுள் வந்தவள் சுவர்க்கடிகாரத்தில் மணி பார்த்தாள். இப்பத்தியில் உள்ள தொகைநிலைத் தொடர்களின் வகைகளை எழுதுக.

21. உரைப்பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை தருக.

ஒரு மணித்துளிக்கு 12 முதல் 18 முறை மூச்சுக்காற்றாய் மனிதன் வெளிவிடும் கார்பன் டை ஆக்சைடை எடுத்துக்கொண்டு மனிதனின் நுரையீரலுக்குத் தேவையான உயிர்வளியைத் தரும் மரங்களைப் போற்றி வளர்க்க வேண்டும். மேம்பட்ட குப்பை மேலாண்மையை மேற்கொள்ள வேண்டும் மின்னாற்றலால் இயங்கும் ஊர்திகளைப் பயன்படுத்த வேண்டும். கச்சா எண்ணெய், நிலக்கரி முதலிய புதைவடிவ எரிபொருள்களைத் தவிர்க்க வேண்டும். காற்றின் தூய்மைக்கு இவ்வாறான நடவடிக்கைகளைப் பின்பற்ற வேண்டும்.

**வினாக்கள்:**

1. எவ்வாறான ஊர்திகள் காற்று மாசுபாட்டைத் தவிர்க்கும்?
2. மரங்களை ஏன் போற்றி வளர்க்க வேண்டும்?
3. காற்று மாசு ஏற்படாமல் இருக்க நாம் மேற்கொள்ள வேண்டிய செயல் ஏதேனும் ஒன்றை எழுதுக.

### பிரிவு – 2


அடிபிறழாமல் எழுதுக. 1X3=3

22. "தென்னன் மகளே" எனத் தொடங்கும் மொழி வாழ்த்துப் பாடல்.

## பகுதி – IV

எவையேனும் இரண்டனுக்கு விடையளிக்க. 2X4=8

23. காட்சியைக் கண்டு கவினுற எழுதுக.



24. இன்சொல் வழி நடப்பதால் உண்டாகும் நன்மைகள் எவையேனும் ஐந்தினையும் தீயசொல் பேசுவதால் ஏற்படும் விளைவுகள் ஐந்தினையும் பட்டியலிடுக.

25. "மரம் இயற்கையின் வரம்" என்னும் தலைப்பில் மாநில அளவில் நடைபெற்ற கட்டுரைப் போட்டியில், முதல் பரிசு பெற்ற தோழனை வாழ்த்தி மடல் எழுதுக.

## பகுதி – V

விரிவாக விடையளிக்க. 2X6=12

26. "புயலிலே ஒரு தோணி" கதையில் இடம் பெற்றுள்ள வருணனைகளும் அடுக்குத் தொடர்களும் ஒலிக்குறிப்புச் சொற்களும் புயலில், தோணி படும் பாட்டை எவ்வாறு விவரிக்கின்றன என்பதைக் கதைவழி சுவைபட விவரிக்க.

27. குமரிக் கடல்முனையையும் வேங்கட மலைமுகட்டையும் எல்லையாகக் கொண்ட தென்னவர் திருநாட்டிற்குப் புகழ் தேடித்தந்த பெருமை, தகைசால் தமிழன்னையைச் சாரும். எழில் சேர் கன்னியாய் என்றும் திகழும் அவ்வன்னைக்கு, பிள்ளைத் தமிழ் பேசி, சதகம் சமைத்து, பரணிபாடி, கலம்பகம் கண்டு, உலாவந்து, அந்தாதி கூறி, கோவை யாத்து, அணியாகப் பூட்டி அழகூட்டி அகம்மிக மகிழ்ந்தனர் செந்நாப் புலவர்கள். இக்கருத்தைக் கருவாகக் கொண்டு "சான்றோர் வளர்த்த தமிழ்" என்னும் தலைப்பில் கட்டுரை எழுதுக.



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com